வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 23.05.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 144 பக்கங்கள் : 12



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## ஐ. நா. மனித உரிமை ஆணையர் ஜூன் 24இல் இலங்கை வருகிறார்

### வெளிவிவகார அமைச்சர் தகவல்

கொழும்பு, மே 23

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் எதிர்வரும் ஜூன் 24ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். அவர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார். இதன்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"போர் முடிவடைந்த பிறகு புதிய அத்தியாயத்தை நோக்கி பயணிப்பதற்குரிய யோசனையை நாம் முன்வைத்தோம். வடக்கு, கிழக்கை கட்டியெழுப்புவதற்குரிய செயலணி

11

## எங்களை சிறைக்கு அனுப்புவதால் மக்களின் பிரச்னைக்கு தீர்வு வராது!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, மே 23

எங்களை சிறைக்கு அனுப்பினால் மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு கிட்டாது. எம்மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் ஊடாக தீர்த்துக் கொள்கிறோம். ராஜபக்ஷக்களையும் கடந்த அரசாங்கங்களையும் விமர்சித்துக் கொண்டிருக்காமல், சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காணுங்கள் - இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு

11

## நாட்டில் மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, மே 23

**நாட்டில் மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வருகிறது. 180 வகையான மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்று சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது. மருத்துவமனை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் என்பனவும் அதீத பற்றாக்குறை நிலவும் 50 வகை அத்தியாவசிய மருந்துகளுக்குள் அடங்கும் என்றும் கூறிய அவர், மருந்துகள் பற்றாக்குறை தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விகளுக்கு இன்னமும் தீர்வுகள் முன்வைக்கப்படவும் இல்லை - பதில்கள் வழங்கப்படவுமில்லை என்றும் கூறினார்.

மேலும், பொதுமக்களால் எழுப்பப்படும் கேள்விகள் இவை. இன்றும்கூட, தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சு பேசிவருகிறது.

11

## பிரபாகரனின் உப்பு என்று இனி இல்லை

### அர்ச்சுனாவிடம் கூறிய அமைச்சர் ஹந்துன்நெத்தி

கொழும்பு, மே 23

"பிரபாகரனின் உப்பு என்று இனி கிடையாது. நாங்கள் முழு நாட்டையும் ஒன்றிணைத்துள்ளோம்", இவ்வாறு கூறியுள்ளார் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி.

ஆனையிறவு உப்பு விவகாரத்தால் பாராளுமன்றத்தில் தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கும் யாழ். மாவட்ட

11

## தமிழ் எம். பி.க்களுடன் பிரதமர் இன்று சந்திப்பு

கொழும்பு, மே 23

வடக்கு மாகாண காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை இன்று வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்தித்து பேசவுள்ளார்.

இந்த சந்திப்பு முற்பகல் 11 மணி முதல் மதியம் ஒரு மணி வரை பாராளுமன்றத்தில் நடைபெறும் என்று பிரதமர் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எதிர்க்கட்சி எம். பி.க்களை பாதாள கும்பல் மூலம் கொல்வதற்கு சதியா?

### தயாசிறி ஜயசேகர எம். பி. கேள்வி

கொழும்பு, மே 23

பாதாள உலகக் கும்பலுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் நேரடி தொடர்பிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இது, பாதாள உலகக் கும்பல் மூலம் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை கொலை செய்வதற்கான சதியின் ஆரம்பமா என்று சந்தேகம் எழுகிறது - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு

11

## புதிய கோவிட் -19 திரிபு பரவும் அபாயம் இல்லை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 23

"நாட்டில் புதிய கோவிட் - 19 திரிபு பரவும் அபாயம் இல்லை. எனவே, மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை", என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

11

## பிள்ளையானின் மனு ஜூனில் விசாரணைக்கு!

கொழும்பு, மே 23

பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் தான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக பிள்ளையான் என்றறியப்பட்ட சி. சந்திரகாந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் ஜூன்

11

## வடக்கு மக்களின் அபிலாசை ஜனாதிபதிக்கு புரியவில்லை!

### திலித் ஜயவீர எம். பி.

கொழும்பு, மே 23

வடக்கு மக்கள் - தெற்கு மக்களின் அபிலாசைகளை புரிந்து கொள்ளாமல் ஜனாதிபதி செயல்படுகிறார். யுத்த வெற்றியின்போது ஜனாதிபதி செயல்பட்ட விதம் பல விடயங்களை உணர்த்தியுள்ளது என்று சர்வஜன சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய

11

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 23

ஆலயத்தின் உண்டியலுடன் மோட்டார் சைக் கிள் மோதிய விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்தார்.

11

## 161 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் நியமன வர்த்தமானி

### இன்று வெளிவரும்!

கொழும்பு, மே 23

161 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 178 உள்ளூராட்சி சபைகளுக்கான

11

## மயங்கி வீழ்ந்து யுவதி மரணம்!

யாழ்ப்பாணம், மே 23

உணவருந்திவிட்டு ஓய்வாக அமர்ந்த யுவதி ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

மல்லாகம் 8ஆம் கட்டையை சேர்ந்த சந்திரராசா விதுஜாம்பாள் (வயது 30) என்பவரே

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மாற்று ஏற்பாடின்றி பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும்!

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம்

யாழ்ப்பாணம், மே 23

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும். அந்தச் சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டங்கள் அல்லது மாற்று ஏற்பாடுகள் தேவையில்லை என்று யாழ்ப்பாண சட்டத் தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவுள்ளது என்றும் அதற்கு பதிலாக உருவாக்கப்படும் புதிய சட்டம் தொடர்பில் பொது மக்கள் தமது அபிப்பிராயங்களை முன்வைக்கலாம் எனவும் அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பாக விவாதிப்பதற்காக யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடியது.

இதன்போது இரு தீர்மானங்களை அந்த அமைப்பு எடுத்தது. இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும். அரசாங்கம் குறிப்பிடு வதை போன்று மாற்றுச் சட் டங்கள் அல்லது புதிய சட் டங்கள் அவசியம் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட் டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை உருவாக்காமல், தற்போது காணப்படும் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைக்குக் கீழான ஏற்பாடுகளின் அடிப்படையில் இந்த விடயங்களை அணுக முடியும். (ஐ)

# இலஞ்சம் வாங்கிய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு மறியல்!

வவுனியா, மே 23

இலஞ்சம் வாங்கியபோது கைதுசெய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐந்து இலட்சம் ரூபாயை இலஞ்சமாக பெற முற்பட்ட போது இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் இருந்து வந்த இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவாலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான பொலிஸ் பொறுப்பதிகாரி நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு பின்னர் கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# "வடக்கின் கலைத்துறை மேம்பாட்டுக்கு தென்னிந்தியா ஒத்துழைக்க வேண்டும்!"

கொழும்பு, மே 23

வடக்கில் கலைத்துறையை மேம்படுத்துவதற்கு இந்திய குறிப்பாக தென்னிந்திய கலைஞர்கள் முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன், அவரின் மனைவி மீனாட்சி நாராயணன் ஆகியோர் பாராளுமன்றில் நேற்று அமைச்சரை சந்தித்தனர்.

இதன்போது, அமைச்சர்களான ஹர்ஷன நாணயக்கார, சரோஜா போல் ராஜ், பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், சிறி பவானந்தராஜா, ரஜீவன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதன்போது இலங்கையின் கலைத்துறைக்கு இந்திய தரப்பின் பங்களிப்பு மற்றும் முதலீடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக, வடக்கில் கலைத்துறையை மேம்படுத்துவதற்கு முடிந்தளவு ஒத்துழைப்புகளை வழங்குமாறு அமைச்சர் சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார்.

கலைத்துறை சார்ந்த விடயங்களில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார். இது பற்றி இந்திய கலைத்துறையில் உள்ள முதலீட்டாளர்களுக்கு தெளிவுபடுத்துமாறும் இதன்போது அமைச்சர் கோரினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழில் 7 பிரதேச செயலர் பிரிவுகளில் இலவச நீர் இணைப்புகள் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், மே 23

தாளையடி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை பிரதேச செயலகங்களில் தலா 500 பயனாளிகளுக்கு இலவசமாக தண்ணீர் இணைப்புகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் புதிய தண்ணீர் இணைப்புகள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.



தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் புதிய நீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. முதல் கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட தேவைப்பாடுடைய பயனாளிகளுக்கு இலவச நீர் இணைப்புகள் வழங்குவது தொடர்பில் பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இதில், முதல் கட்டமாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் நீரிணைப்பிலிருந்து புதிய இணைப்புகளை விரிவுபடுத்தவும் தாளையடி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இலவச நீர் விநியோகம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டன. மேலும், இந்த பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து 500 பயனாளிகள் தெரிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், பிரதேச செயலாளர்கள் (கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் பருத்தித்துறை, வேலணை), தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர் மற்றும் மீள் குடியேற்றப் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# சுற்றிவளைப்பில் 561 பேர் கைது!

கொழும்பு, மே 23

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 171 கிராம் 51 மில்லி கிராம் ஹெரோயினுடன் 158 சந்தேக நபர்களும் 443 கிராம் 77 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 199 சந்தேக நபர்களும், 47 கிராம் 200 மில்லி கிராம் குஷ் போதைப்பொருளுடன் ஒருவரும், 766 கிராம் 48 மில்லி கிராம் கஞ்சாவுடன் 192 சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 1,655 போதை மாத்திரைகளுடன் 6 சந்தேக நபர்களும், 25 ஆயிரத்து 651 மதன மோதகங்களுடன் 4 சந்தேக நபர்களும் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் சட்ட விரோத சிகரெட்களுடன் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பதில் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில், போதைப்பொருள் கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை தடுப்பதற்காக கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பல சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹெரோயினுடன் இருவர் கைது!

கொழும்பு, மே 23

100 கிலோவுக்கும் அதிக மான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டை - வீரகெட்டியவிலுள்ள வீடொன்றிலேயே 101 கிலோ 470 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பெற்ற வாக்கு சதவீதத்தின்படியே உள்ளூராட்சி உறுப்பினர் நியமனம்

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, மே 23

உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளை நியமிக்கும்போது, தனிப்பட்ட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் சதவீதத்தை மட்டுமே கணக்கில் எடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி முடிவு செய்துள்ளது.

இதன்படி, அதிக சதவீத வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நியமிக்கத் தகுதியுடையவர்களாவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை நியமிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு எடுத்த முடிவை எக்காரணம் கொண்டும் மாற்றக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் முறைமையின்படி, அரசியல் கட்சிகள் தங்கள் போனஸ் பட்டியலில் இருந்து வேட்பாளர்களை நியமிக்கலாம். இருப்பினும், வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும், வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப் பெற்றவர்களுக்கு முன்னுரிமையளிக்க ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை ரீதியான முடிவை எடுத்துள்ளது.

கட்சியின் தலைமைத்துவம் இந்த நடவடிக்கையை உள்ளக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் வாக்காளர்களின் விருப்பை இந்த நியமனங்கள் பிரதிபலிப்பதை உறுதி செய்வதற்கும் ஒரு படியாகக் கருதுவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் 2026 முதல் சிங்கள மொழிமூல பாடநெறி!

## சபையில் அரசாங்கம் அறிவிப்பு

வவுனியா, மே 23

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் சிங்கள மொழிமூல பாடநெறிகளை அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிலையியல் கட்டளை சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா கல்வியியற் கல்லூரியில் எனக்குத் தெரிந்த வகையில் 2016 ஆம் ஆண்டு முதல் சிங்கள மொழிமூல பாடநெறிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

யுத்த நிலைமை காரணமாகவே அவ்வாறு நிறுத்தப்பட்டதாக காரணங்கள் கூறப்பட்டன. மேலும், விரிவுரையாளர் களை நியமிப்பதில் உள்ள சிக்கல்களும் உள்ளன. எவ்வாறெனினும் இந்தப் பிரச்னையில் நாம் தலையிட்டுள்ளோம். அடுத்த வருடம் மாணவர்களை இணைத்துக்கொள்ளும்போது சிங்கள மொழிமூல பாடநெறிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து பாடநெறிகளையும் ஒரே தடவையில் ஆரம்பிக்க முடியாவிட்டாலும் கனிஷ்ட பிரிவில் கற்கைகளை மேற்கொள்ளும் பயிலுநர்களுக்கு சிங்கள மொழி மூல பாடநெறிகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.05.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## நியாயமான கேள்வி பதில் சொல்லுமா அரசாங்கம்?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் வவுனியா மாவட்ட தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப. சத்தியலிங்கம், வடக்கு - கிழக்கின் பொருளாதார மேம்பாட்டில் அரசாங்கம் பாராமுகமாக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். தனது பாராளுமன்ற உரையின்போது, இது தொடர்பில் சந்தேகம் எழுப்பிய சத்தியலிங்கம் அதற்கு உதாரணமாக குறிப்பிட்டிருக்கும் விடயம் மிகவும் முக்கியமானது. ஏனைய தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, "இந்திய அரசாங்கம் காங்கேசன்துறை துறைமுகத்தை அவிருத்தி செய்வதற்கு 6 கோடியே 20 இலட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது. ஆனால், இன்று வரையில் சாத்தியப்பாட்டு ஆய்வு என்னும் அடிப்படையில் அரசாங்கம் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியை பிற்போட்டு வருகிறது", என்று சுட்டிக்காட்டியிருக்கும் சத்தியலிங்கம், "இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார அபிவிருத்தியில் மிகமுக்கியமான பங்களிப்பை வழங்கக்கூடிய திட்டமொன்றை இவ்வாறு இழுத்தடிப்பதானது நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கும்", என்று மிகவும் சரியாகப் பதிவு செய்திருக்கிறார்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மட்டுமல்ல, வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடப்பட்ட இந்தியாவின் அனைத்துத் திட்டங்களுமே மந்தகதியில்தான் நகர்கின்றன. இந்தத் திட்டங்கள் தொடர்பில் உண்மையிலேயே அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறதா அல்லது அக்கறை இருப்பது போன்று பாவனை செய்கிறதா என்று ஒருவர் சந்தேகம் கொள்ளும் அளவுக்கே விடயங்கள் ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றன. வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் பொருளாதார திட்டங்களை உடனடியாக முன்னெடுக்கக்கூடாதென்று அரசாங்கம் எண்ணுகிறதா?

இந்தியாவைப் பொறுத்தவரையில் வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டிருக்கும் அனைத்து முதலீடுகளுமே பொருளாதார ரீதியில் மிகப்பெரும் திட்டங்களாகும். அந்தத் திட்டங்கள் விரைவாக அமுல்படுத்தப்பட்டால் பொருளாதார ரீதியில் மோசமான சரிவை சந்தித்திருக்கும் இலங்கை முன்னோக்கி நகர்வது விரைவாக இடம்பெறும். நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்த போது இந்தியாவே 400 கோடி அமெரிக்க டொலர்களை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கியது.

இந்தியாவின் உதவியானது அப்போதைய அவசர நிலையில் இலங்கைக்கான மூச்சுக் காற்று போன்றது. இதனை அப்போதைய ஆட்சியாளர்கள் சுட்டிக்காட்டியுமிருக்கின்றனர். உண்மையில், விரைவான பொருளதார மீட்சியை மனதில் கொண்டே மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரண்டனர். ஆனால், மக்கள் எதற்காக தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தனரோ அதனை நோக்கி அரசாங்கம் நகர்வதாகத் தெரியவில்லை.

வடக்கு - கிழக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்னும் அடிப்படையில்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக தேசிய மக்கள் சக்திக்கு பின்னால் அணிதிரண்டனர். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தமிழ் மக்கள் மத்தியிலான சிந்தனை மாற்றத்தை படம்பிடித்துக் காட்டுகிறது. இந்த நிலைமை மேலும் அதிகரிக்கலாம்.

தமிழ் மக்களை சமத்துவமாக நடத்தப் போவதாக அரசாங்கம் கூறுவது உண்மை என்றால் வடக்கு - கிழக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை அரசாங்கம் விரைந்து முன்னெடுக்க வேண்டும். தொடர்ந்தும் முக்கியமான திட்டங்களை இழுத்தடிப்பதற்கு அரசாங்கம் காரணங்களை கூறுமானால் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியானது வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியை விரும்பவில்லை என்னும் சந்தேகமே வலுவடையும்.

# வடமராட்சியில் சுமார் 300 படகுகள் அனுமதியின்றி கடல் அட்டை பிடிப்பில்!

### வட மாகாண கடற்றொழில் இணையம்

வடமராட்சி, மே 23

"யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது என்று நாம் குரல் கொடுத்து வரும் நிலையில் 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 600 வரையிலான படகுகள் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ளன", என்று வட மாகாண கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும், "யாழ். மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சி பகுதிகளில் கடலட்டை பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது என நாம் குரல் கொடுத்து வரும் நிலையில் 310 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடலட்டை பிடிப்பதற்காக 310 படகுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில் 600 வரையான படகுகள் கடலட்டை பிடியில் ஈடுபட்டுள்ளன.

ஊழலற்ற கட்சி, அரசு என கூறிக் கொண்டு வந்த என். பி. பி. 310 படகுக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், எப்படி 600 வரையான படகுகள் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ள்ன. அனுமதிக்கு மேலான 300 படகுகளுக்கும் லஞ்சம் வழங்கியே கடலட்டை பிடிப்பில் படகுகள் ஈடுபட்டுள்ளன என்றும் அவர் சாடினார்.

(ஐ-02)

## விழிப்புணர்வு நடை பயணம்

யாழ்ப்பாணம், மே 23

மூளை ஆரோக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இலங்கை நரம்பியல் நிபுணர்களின் சங்கம் நடைபயணம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

உலக மூளை தினத்தை கடைப்பிடிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்த நடைபயணம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கந்தர் மடம் சந்தியில் ஆரம்பமாகி துரையப்பா விளையாடரங்கில் நிறைவு பெறவுள்ளது. (ஐ)

## சங்கிலியன் மன்றத்தின் அமுத விழா

யாழ்ப்பாணம், மே 23

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு அமுத விழாவும் பாரம்பரிய விளையாட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கிலியன் மன்ற முற்றத்தில் நிலையத்தின் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கந்தசுவாமி ஆலய ஆஸ்தான வித்துவான் பிச்சையப்பா ரஜீவன், சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் க. அறிவரசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## சிலப்பதிகார விழா!

யாழ்ப்பாணம், மே 23

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று தினங்கள் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ளன.

அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதனை நடுவராகக் கொண்டு விவாத அரங்கும் கம்பவாரதி இ. ஜெயராஜை நடுவராகக் கொண்டு பட்டிமண்டபமும் நடைபெறவுள்ளன. (ஐ)

## தூத்துக்குடி - கொழும்பு இடையே தினசரி சரக்கு படகு போக்குவரத்து!

தூத்துக்குடி, மே 23

தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கு தினசரி சரக்கு படகு போக்குவரத்துக்கு இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் அனுமதி அளித்துள்ளது.


இலங்கையில் இருந்து தூத்துக்குடிக்கு பழைய இரும்பு பொருள்கள், பழைய காகிதங்கள் ஏற்றுமதியாகின்றன. தூத்துக்குடியில் இருந்து இலங்கை, மாலை தீவுகள், இலட்சத்தீவுகளுக்கு மரக்கறிகள், கட்டுமான பொருட்கள் உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

முன்னதாக, தூத்துக்குடி - கொழும்பு இடையே செப்ரெம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையே சரக்கு படகு சேவை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நிபந்தனைகளுடன் அனைத்து பருவ காலங்களிலும் படகு சேவையை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வ. உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் பழைய துறைமுகத்தில் இருந்து சரக்குகளை ஏற்றிச் செல்ல சுமார் 25 படகுகள் இயக்கப்படுகின்றன.

இந்தப் படகுகள் மூலம் சுமார் 250 முதல் 400 தொன்களுக்கு மேல் சரக்குகளை ஏற்றிச் செல்லப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. லேசாக தலை வலிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**இடபம்**

உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவை.

**கன்னி**

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**

எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**மகரம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

# யாழில் 22 வயது யுவதி கடத்தல் பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மே 23

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் 22 வயது யுவதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதியும் பூநகரி கௌதாரிமுனை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளனர். பெண் வீட்டாருக்கு பயந்து இருவரும் தலைமறைவாக இருந்துள்ளனர்.

பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு சென்றனர். இதன்போது அங்கு வந்த பெண் வீட்டார் திருமணம் செய்த இருவரையும் பிரிப்பதற்கு முயற்சி செய்தபோதும் இருவருக்கும் 18 வயது நிறைவடைந்ததாலும் இருவரும் பிரிவதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலையில் அவர்களைப் பிரிக்க முடியாது என இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் பெண் வீட்டாரின் கட்டாயத்தின் பேரில் இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இருவருக்கும் திருமண வயது வந்துவிட்டதால் அவர்களைப் பிரிக்க முடியாது. அவர்களது விருப்பம் போல சேர்ந்து வாழலாம்என நீதிமன்றம்தீர்ப்பளித்தது.

இவ்வாறான பின்னணியில் வழக்கு நிறைவடைந்து வரும் போது மாலை 04.37 மணியளவில் பெண்ணின் சகோதரன் உள்ளிட்ட சிலர் அடங்கிய குழுவினர் அந்த இளைஞனைத் தாக்கிவிட்டு யுவதியை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றனர். இந்த நிலையில் இது குறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

காயமடைந்த இளைஞன் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். தெல்லிப் பழை பொலிஸார் குறித்த யுவதியை தேடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.(எ-05)

# ஈழத்து சமயப்பெரியார்கள் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், மே 23

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் "திருவிளையாடல்" புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்துச் சமயப் பெரியார்கள் "குருபூஜை விழா தொடர் 02 ஆத்மீக வள்ளல், ஆத்மஜோதி நா. முத்தையா பெரியாரின் குருபூஜை விழா தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் 25 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைபில் நடைபெறவுள்ள இந்த விழாவில் ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நா. முந்தையா பெரியவரின் குருபூஜையை அடுத்து சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "ஆத்மஜோதி முத்தையா பெரியாரின் சமயப்பணி" என்னும் விடயப் பொருளில் நிகழ்த்துவார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். மாணவர்களின் கலைநிகழ்வும் ஆன்மீக விருந்தினர் உரையும் நடைபெறும். தொடர்ந்து குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொகுப்புரையை இளஞ் சைவப்புலவர் க. கயிலைவாசன் வழங்கவுள்ளார். (எ)

# "அழிவுநிலைக்கு தள்ளப்படும் மன்னார் தீவு மக்கள் ஒருபோதும் துணை நிற்கக்கூடாது"

மன்னார், மே 23

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. வேகமாக அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இதற்கு அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல தொழில் நிறுவனங்களும் முன் நின்று செயல்பட்டு வருகின்றன. இதற்கு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்களின் எந்தவித அனுமதியுமின்றி கனிய மணல் அகழ்வு நடவடிக்கை மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக மக்களின் காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுவதனையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் செயல்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் மக்களின் வாழ்வாதாரமும் எதிர்காலமும் பாதிக்கப்படும் என சூழலியலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எனினும் மக்களின் எதிர்கால பிரச்னைகளை உள்வாங்காமல் அரச திணைக்களங்களின் ஆதரவுடன் பல நிறுவனங்கள் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன.

மக்களை அழிவிலிருந்து காப்பாற்றாது இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படும் பல்தேசிய நிறுவனங்கள் மக்களின் வாழ்விடங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் செயல்பட்டு வருகின்றன- என்றார். (எ)

# புதுக்குடியிருப்பில் தேனீக்கள் தின நிகழ்வு

புதுக்குடியிருப்பு, மே 23

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தால் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் அனுசரணையுடன் உலக தேனீக்கள் தின நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக் குட்பட்ட வள்ளிபுனம் பிரதேச பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது தேனீ வளர்ப்பு சம்பந்தமான கருத்தரங்கும் தேனீ வளர்ப்புக்கான தேனீப் பெட்டிகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து தேனீ வளர்ப்பு பிரதேசத்துக்கான பயணமும் இடம்பெற்று தேனீ வளர்ப்பு தொடர்பான செய்முறைகள் மூலம் தெளிவூட்டப்பட்டிருந்தன.

புதுக்குடியிருப்பு மந்துவில் பிரிவின் விவசாய போதனாசிரியர் பு. பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், உதவி விவசாய பணிப்பாளர் மேரி ஆன்சலா லக்சன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ. விஜயகுமார், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் து. ஜெயந்தன் , காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் விவசாய நிபுணர் க. வசந்தன், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பு வர்த்தமானியை இரத்து செய்ய அழுத்தம் வழங்குக!

## தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை



கொழும்பு, மே. 23

**வடக்கில் காணி அபகரிப்பு நோக்கத்திற்காக அரசு வெளியிட்ட வர்த்தமானியை உடன் இரத்துச் செய்ய தென்னாபிரிக்க அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தென்னாபிரிக்கத் தூதரிடம் வலியுறுத்தினார்.**

தென்னாபிரிக்கத் தூதுவருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது.

சந்திப்புகளை தொடர்ந்து தமிழ் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்கு கூறிய கருத்துக்கள் வருமாறு-இன்று (நேற்று) காலை கொழும்பில் உள்ள தென்னாபிரிக்கத் தூதுவரைச் சந்தித்தேன். அவருடனான சந்திப்பில் மூன்று விடயங்கள் தொடர்பில் பேசியிருந்தேன்.

இந்த சந்திப்பின் பொழுது கடந்த 2025 மார்ச் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் சுமார் 6000 ஏக்கர் காணிகளை அரச காணியாக சுவீகரித்து திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் கபட முயற்சிக்கு எதிராக நாம் எமது ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தோம்.

மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளை உறுதிபடுத்த வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அரசு வெளியிட்ட குறித்த வர்த்தமானியை அரசு மீளப் பெற வேண்டும் எனவும் அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினோம்.

வடக்கு-கிழக்கு மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டது அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களின் சொந்தமான ஆவணங்கள் அழிவடைந்தும் தொலைந்துமுள்ளன. அத்துடன் சுனாமி மூலம் எமது மக்கள் சொத்துக்கள் ஆவணங்களை இழந்தார்கள். ஆகவே ஆவணங்கள் மூலம் உறுதிபடுத்துவது சாத்தியமற்ற விடயம்.

அத்துடன் போர் காரணமாக தமிழீழ மக்களின் சனத்தொகை பெருமளவில் புலம் பெயர்ந்துள்ளது. இந்த மக்கள் பயங்கரவாதச் சட்ட அச்சுறுத்தல் காரணமாகவும் நாட்டினை விட்டு வெளியேறினார்கள்.

இவர்களின் நோக்கம் மக்களின் காணி பிரச்சினைகளை தீர்ப்பது இல்லை. மாறாக மக்களின் ஆவணங்களற்ற காணிகளை அரச காணிகளாக சுவீகரிப்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு உரித்துக்கள் வழங்கப்படல் வேண்டும் என்பதில் மாற்றுகருத்திற்கு இடமில்லை. ஆனாலும்

இந்த வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள அபகரிப்பை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இரண்டாவது விடயம் குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்திற்கு 79 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே சொந்தமானதென 1932 ஆம் ஆண்டு வர்த்தமானி வெளிப்படுத்துகிறது. எனினும் அதற்கு மேலதிகமாக 325 ஏக்கர் காணியினை குறித்த தொல்பொருட் திணைக்களத்திற்கு வழங்க வேண்டுமென கடந்த ஆட்சிக் காலத்தில் புத்த பிக்கு அரசிடம் கோரியிருந்தார். எனினும் தமிழ் மக்கள் விவசாயம் செய்து வந்த காணிகள் என்பதனால் அவர்களது விவசாய நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அப்போதய சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த 325 ஏக்கரிலும் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமெனவும் கூறப்பட்டிருந்தது.

எனினும் வழமைபோன்று குறித்த பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மூன்றுபேர் நீதிக்குப் புறம்பாக கைது செய்பட்டு இரண்டுபேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி மட்டத்தில் தீர்வு எட்டப்பட்ட ஒரு தீர்மானத்தினை அமுல்படுத்தாமல் விவசாய நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த வயல்களுக்கு நீர்விநியோகம் செய்ய வேண்டிய குளத்தில் தமிழ் மக்கள் மீன்பிடியில் ஈடுபடவும் தடையும் விதிக்கப்பட்டுள்ளதோடு விவசாயத்திற்கு குறித்த நீரை பயன்படுத்த தடையையும் விதித்துள்ளனர்.

இதன் மூலம் விவசாயிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தல்கள் எதுவும் அற்ற குறித்த பகுதியில் மக்கள் சுதந்திரமாக தொழில் செய்வதனை உறுதிப்படுத்தவும் அநீதியான முறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு விவசாயிகளையும் விடுவிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

மூன்றாவது விடயமாக தையிட்டி சட்டவிரோதமான விகாரை தொடர்பில் பேசியிருந்தோம் . சட்டவிரோதமான விகாரை என்று தெரிந்தும் இன்னமும் அந்த காணிகளின் உரிமையாளர்களிடம் காணிகளை வழங்காது அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றது.தையிட்டி விகாரை சட்டவிரோதமானது தொல்பொருளுடன் தொடர்பு அற்றது சட்டவிரோதமாக கட்டப்பட்டது அகற்றபட்டே ஆகவேண்டும். காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படல் வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை முன்னுடுக்க வேண்டுமெனவும் கோரியிருந்தேன்-என்றார். (அ)

## 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் பிக்கு கைதாகி விளக்கமறியலில்

கொழும்பு, மே. 23

13 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்கு ஒருவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

செவனகல பிரதேசத்தைச் சேர்ந்த பிக்குவே, எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உடல் முழுவதும் கொப்புளங்கள் ஏற்பட்டு தாங்கமுடியாத அரிப்பு மற்றும் வயிற்றுக் கோளாறு காரணமாக, அந்த சிறுமி தன்னுடைய தந்தையுடன் கடந்த 18 ஆம் திகதி விஹாரைக்குச் சென்று பிக்குவை சந்தித்துள்ளனர்.

அன்றைய தினம் தேசிக்காயை வெட்டி, ஏதோ மந்திரம் செய்த பிக்கு, மறுநாள் வருமாறு கூறி, வரும்போது, வெட்டிய தேசிக்காயையும் எடுத்து வருமாறு அனுப்பியுள்ளார்

அதேபோல், மறுநாளும் தன்னுடைய மகளை அழைத்துக்கொண்டு தந்தை விஹாரைக்கு சென்றுள்ளார்.

இருவரையும் அமரச் சொன்ன பிக்கு, தேசிக்காயை வெட்டி வழிந்தோடும் நீரில் வீசி விட்டு வருமாறு தந்தையிடம் கூறியுள்ளார்.

பிக்கு கூறியதை அடுத்து, தேசிக்காயை எடுத்துக்கொண்டு விஹாரையில் இருந்து தந்தை வெளியே சென்றுள்ளார். அப்போது, சிறுமியை தான் வசிக்கும் வீட்டுக்கு அழைத்துச் சென்ற பிக்கு அங்கு வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

தந்தை திரும்பி வந்தபோது, பிக்கு வசிக்கும் வீட்டில் இருந்து மகள் வெளியே வந்துள்ளார். தந்தையும் என்ன என்று கேட்டபோது, மகள் ஒன்றுமே கூறவில்லை.

எனினும், வீட்டுக்கு வரும் வழியில் தனக்கு நேர்ந்ததை தந்தையிடம் தெரிவித்துள்ளார். அதன்பின்னர், தந்தை செவனகல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்பின்னர் 42 வயதான பிக்கு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ

## அரச வாகனங்களுக்கு புதிய டிஜிற்றல் எரிபொருள் அட்டை

கொழும்பு, மே. 23

அரசாங்க வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுப்பதற்கும், செயல்திறனை மேம்படுத்துவதற்கும் இலக்காகக் கொண்ட புதிய டிஜிற்றல் எரிபொருள் அட்டை முறையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் கொள்கையின் கீழ் இந்த முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுவரை அரச நிறுவனங்களின் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும்போது கூப்பன் முறைமையே காணப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.தற்போது டிஜிற்றல் அட்டை முறைமையை அறிமுகப்படுத்தற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த டிஜிற்றல் அட்டை மூலம் அனைத்து எரிபொருள் விநியோக நிலையங்களிலும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிபதிக்கு தகாத குறுஞ்செய்தி அனுப்பிய சட்டத்தரணி கைது!

கொழும்பு, மே. 23

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு ஆபாசமான குறுஞ்செய்திகளை அனுப்பிய குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் அளித்த முறைப்பாட் டைத் தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சட்ட மா அதிபருக்கு அறியப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் 2022 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து சட்ட மா அதிபர், பொலிஸ்துறைக்கு பல் வேறு பரிந்துரைகளை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகிக்க சென்ற ஒருவர் கைது!

கொழும்பு, மே. 23

பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துச் சென்றவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பதுளை, ஹிகுருகமுவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

பதுளை-மஹியங்கனை வீதியில் 10,510 மில்லிகிராம் ஹெரோயின் எடுத்துச் சென்ற ஓட்டோச் சாரதியே கைது செய்யப்பட்டார். அத்துடன் ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது என பதுளை பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பதுளையில் பிரபல தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக இந்த ஹெராயினை எடுத்துச் சென்றதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின் போது, மூன்று சிறிய பொட்டலங்களில் பொதி செய்யப்பட்டிருந்த ஹெராயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ஏக்கர் கணக்கில் மகாவலி நிலங்களை தன் நண்பர்களுக்கு வழங்கினார் சமல்!

### ஹேஷா விதானகே குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 23

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தனது அரசியல் நண்பர்களுக்கு எந்தவித அடிப்படையும் இல்லாமல் ஏக்கர் கணக்கில் மகாவலி நிலங்களை வழங்கியதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது குற்றம் சாட்டினார்.

எம்பிலிப்பிட்டியவில் உள்ள வளவே வலயத்தில் உள்ள மகாவலி நிலங்கள், எந்தவொரு சாத்தியக்கூறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமல் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வளவே வலயத்தில் மகாவலி நிலங்களை வழங்கும் செயல்முறையை மறுபரிசீலனை செய்து, எந்தவொரு உற்பத்தி பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாத நிலங்களை கையகப் படுத்துமாறு அவர் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

இந்த நிலங்கள் உண்மையில் பயிர் செய்யும் அல்லது சாத்தியமான திட்டங்களைத் தொடங்க நம்பும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்-என்றார்.சில நிலங்கள் குறித்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட நிலங்கள் குறித்து முறைப்பாடு வந்தால், விசாரணைகள் தொடங்கப்படலாம் என்றும் காணி மற்றும் நீர்ப்பாசனத் துறை பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் சுகாதாரம் தொடர்பான மூலோபாயத் திட்டம் அவசியம்

## யாழ்.மருத்துவர் மலரவன் அநுரவுக்கு கடிதம்

கொழும்பு, மே. 23

**இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதாரம் தொடர்பான மூலோபாயத் திட்டமொன்றினை உருவாக்கி அதனைச் செயற்படுத்தவேண்டும் என ஜனாதிபதியிடம் யாழ். போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட கண் சத்திர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் எம்.மலரவன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் பல்வேறு சுகாதாரக் குறிகாட்டிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஒப்பானதாக காணப்படுகிற போதும் கண் சுகாதாரக் குறிகாட்டிகள் பிராந்திய அண்டை நாடுகளை விட பின்னடைந்து காணப்படுகிறது.

இலங்கையின் கண் சிகிச்சை சேவைகள் முதனிலை சுகாதார சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்படாமலும் அவற்றின் ஒரு பாகமாக உள்வாங்கப்படாமலும் உள்ள நிலைமையால் கண் பார்வை இழப்பு அல்லது பாதிப்பு அதிகரித்துச் செல்கிறது. குறிப்பாக வயது வந்தவர்களில் அதிகரித்துள்ளது.

இதனால் வாழ்க்கைத்தரம், உற்பத்தித்திறன் என்பன பாதிக்கப்படுவதுடன் பார்வை இழந்தவர்களை அதிகளவில் பராமரிக்கவேண்டிய தேவை சமூகத்துக்கும் குடும்பங்களுக்கும் நாட்டுக்கும் ஏற்படுவது பெரும் சுமையாகும்.

இந்த நிலைமைகளிலிருந்து நாட்டினையும் மக்களினையும் மீட்டெடுக்க சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதாரம் தொடர்பான மூலோபாயத் திட்டமொன்றினை உருவாக்கி அதனை செயற்படுத்தவேண்டியது அவசியம் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# போக்குவரத்து கட்டமைப்பில் அறிமுகமாகும் புதிய விதிகள்!

கொழும்பு, மே. 23

வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கிலும், முறையான போக்குவரத்து கட்டமைப்பை ஏற்படுத்தும் நோக்கிலும், எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர், பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-40 வயதுக்கும் மேற்பட்ட சாரதிகளுக்காக, விசேட வைத்தியப் பரிசோதனை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை அடையாளம் காண்பதற்காக விசேட உபகரணங்களைப் பயன்படுத்தி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வீதிகளில் காணப்படும் சகல வீதி சமிக்ஞை விளக்குகளிலும் நேரமானியைப் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர், அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களின் பின்பகுதி ஆசனங்களில் அமர்ந்து செல்பவர்களுக்கும் ஆசனப் பட்டியைக் கட்டாயமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 12 மாதங்களில் இலத்திரனியல் வாகனச் சாரதி அனுமதிப் பத்திரத்தையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது-என்றார். (அ)

# குஷ் போதைப்பொருளுடன் நால்வர் விமான நிலையத்தில் வைத்து கைது!

கொழும்பு, மே. 23

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 7 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான "குஷ்" போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நால்வர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதலில், கொழும்பு 02 பகுதியைச் சேர்ந்த 57 வயதான பெண் வியாபாரி ஒருவரை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தினர். பின்னர் விமான நிலைய கண்காணிப்பு கமெராக்கள் மூலம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், சம்பவத்தில் தொடர்புடைய ஏனைய மூவர் அடையாளம் காணப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள், கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 45 வயதான ஒரு ஆண், அவரது 42 வயதான மனைவி மற்றும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் ஆவார்.

தாய்லாந்தில் இவ்வகை போதைப்பொருட்கள் திறந்த சந்தையில் எளிதில் கிடைக்கின்ற நிலையில், சந்தேக நபர்கள் இந்தியாவின் பெங்களூர் வழியாக இலங்கைக்கு வந்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர்கள் வைத்திருந்த பயணப்பொதிகளில் 7.150 கிலோ கிராம் "குஷ்" போதைப் பொருள்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்த வத்திக்கான் தூதுவர்!



கொழும்பு, மே. 23

இலங்கையின் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வே, தனது பதவிக்காலம் முடிவடைந்து புறப்படுவதற்கு முன்பு வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராகப் பணியாற்றி வரும் தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வே, இலங்கையில் இருந்த காலமானது மறக்க முடியாத நிகழ்வுகளால் நிறைந்த காலம் என்றும், இலங்கை மிக அழகான நாடாக நீண்ட காலம் தனது நினைவில் இருக்கும் என்றும் அமைச்சர் விஜித ஹேரத்திடம் தெரிவித்தார்.

வத்திக்கானில் நடைபெற்ற பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமைச்சர் பங்கேற்றதற்காக வத்திக்கானின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத்துக்கு தூதுவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து வெளியேறும் வத்திக்கான் தூதுவருக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், வத்திக்கான் எப்போதும் இலங்கைக்கு இணக்கமான முறையில் செயல்பட்டு வருவதாகவும், அதற்காக இலங்கை அரசாங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார். (அ)

# பாராளுமன்ற ஊழியர்களின் உணவு கட்டணம் உயர்கிறது

கொழும்பு, மே. 23

பாராளுமன்ற சாதாரண ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணத்தை மூன்று மடங்கு அதிகரிக்க பாராளுமன்றச் சபை குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, பாராளுமன்ற ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணம் முந்தைய விலையில் 1000 ரூபாவாக இருந்தது.

புதிய திருத்தத்தின்படி, சாதாரண ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணம் 3600 ரூபாவாக அதிகரிக்கும். பாராளுமன்ற நிர்வாக அதிகாரிகளின் உணவுக் கட்டணத்தை 1500 ரூபாவிலிருந்து 4000 ரூபாவாக உயர்த்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் சமர்ப்பித்த முன்மொழிவைத் தொடர்ந்து மாதாந்த உணவுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதாக பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பாராளுமன்ற ஊழியர்களின் மாதாந்த உணவுக் கட்டணம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

இதற்கிடையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் தினசரி உணவுக் கட்டணம் அண்மையில் 2000 ரூபாவாக உயர்த் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலை மாணவர் விடுதிகள் அதிகரிக்கும்

கொழும்பு, மே. 23

பல்கலைக்கழக மாணவ விடுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமரும் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்கான திகதி அறிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மின் கட்டணம் அதிகரித்தால் நீர் கட்டணத்திலும் திருத்தம்!

கொழும்பு, மே. 23

மின் கட்டணம் அதிகரிக்கப்படுமாயின், அதற்கேற்ப நீர்க் கட்டணத்திலும் திருத்தம் மேற்கொள்ளவேண்டியிருக்கும் எனத் தேசிய நீர் வழங்கல் அவடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அந்த சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறாயின் திருத்தம் மேற்கொள்ளப்படும் முறைமை தொடர்பில் அமைச்சரவைக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசேட அறிவியல் ஆய்வுகளை நடத்த முடிவு

கொழும்பு, மே. 23

அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் உட்பட பல குற்றச் செயல்கள் பதிவாகும் தென் மாகாணத்தில், அவ்வாறான குற்றச் செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக விசேட அறிவியல் ஆய்வுகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதன்படி, பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

குறித்த ஆய்வு நடவடிக்கையின் பின்னர் அவ்வாறான குற்றங்களுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, அவற்றைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டி விகிதங்களை குறைத்த மத்திய வங்கி!

கொழும்பு, மே. 23

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது நேற்று முன் தினம் நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஓரிரவு கொள்கை வட்டி வீதத்தை **25 அடிப்படை புள்ளிகளாக குறைத்து 7.75 சதவீதத்தில் பேண தீர்மானித்துள்ளது.**

இதன் மூலம் பணவியல் கொள்கையை இலங்கை மத்திய வங்கி மேலும் தளர்த்தியது.

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு மற்றும் பூகோள பொருளாதாரப் போக்குகளை கவனமாக பரிசீலித்த பின்னரே நாணயக் கொள்கைச் சபை இந்த முடிவை எடுத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி கூறுகிறது.

நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கம் படிப்படியாக 5 வீத இலக்கை அடைவதை உறுதி செய்வதன் மூலம் பொருளாதாரத்தை அதன் அதி கபட்ச கொள்ளளவை அடைவதற்கு ஆதரவளிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# கூடிய விரைவில் மாகாண தேர்தல்!

**ஆளும் தரப்பினர் தகவல்**

கொழும்பு, மே. 23

**மாகாணசபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்தும் அரசாங்கத்தின் திட்டம் மாறாது என்று ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.**

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கான வாக்கு வங்கி சரிந்துள்ளதால், மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முடிவை அரசாங்கம் பிற்போடக்கூடும் என எதிரணிகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாண சபைகளுக்குமான தேர்தலை அடுத்த வருடம் முற்பகுதியில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என ஏற்கனவே அரச தரப்பால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, அந்த முடிவில் மாற்றம் வராது என்றே மேற்படி உறுப்பினர் குறிப்பிட்டார். (அ)

# ஊழல்வாதிகளைச் சலவை செய்துவிட்டா தேசிய மக்கள் சக்தியில் சேர்க்கிறார்கள்?

## இம்ரான் மஹரூப் எம்.பி. கேள்வி

கொழும்பு, மே. 23

தேசிய மக்கள் சக்தியின் பெயரை "தேசிய சலவை கட்சி" என்று மாற்றிக் கொண்டால் பொருத்தமாக இருக்கும். தேர்தலுக்கு முன்னர் ஊழல்வாதிகள் மற்றும் மாற்றுக் கொள்கையுடையவர்களை இணைத்துக் கொள்ள போவதில்லை என்றார்கள். ஆனால் தற்போது பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள். ஊழல்வாதிகளை சலவை செய்தா கட்சியில் இணைத்துக் கொள்கிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற நிதி சட்ட கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பெருமளவிலான ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. எமது கட்சிக்கு ஆதரவளித்த அனைவருக்கும் இந்த உயரிய சபை ஊடாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சியமைப்பது தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியை போன்று பேசுகிறது. கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறது. மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் ஒன்றிணைந்து செயற்பட்டவர்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு உள்ளாக்கப் பட்டவர்களுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறது-என்றார். (அ)

# இலங்கை எம்.பிக்களுக்கு இந்தியாவில் பயிற்சிகள்!

கொழும்பு, மே. 23

புதுடில்லியில் உள்ள ஜனநாயகத்திற்கான பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொள்வதற்காக, 20 இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நான்கு மூத்த பாராளுமன்ற அதிகாரிகள் உட்பட 24 பிரதிநிதிகள் குழு இந்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.

பிரதிச் சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலிஹ் தலைமையிலான குழுவை நேற்று முன் தினம் கொழும்பில் உள்ள இந்தியா ஹவுஸில் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா வரவேற்றார்.

மே 26 முதல் 30 வரை திட்டமிடப்பட்டுள்ள இந்த ஒரு வார கால நிகழ்ச்சியில், சட்டமன்ற மற்றும் வரவு-செலவுத் திட்ட நடைமுறைகள், பாராளுமன்றக் குழு அமைப்புகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் குறித்து கவனம் செலுத்தப்படும். பங்கேற்பாளர்கள் இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை ஆராய்வதுடன், டிஜிற்றல் தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் நகர்ப்புற இயக்கம் ஆகியவற்றில் முன்னேற்றங்களைக் காண்பிக்கும் களப் பயணங்களில் ஈடுபடுவார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரலில் இலங்கைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

*மின்சார கட்டண திருத்தம்*

# இன்று முதல் பொதுமக்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும்!

கொழும்பு, மே. 23

இலங்கை மின்சார சபையால் இந்த ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட இரண்டாவது மின்சார கட்டணம் குறித்து பொதுமக்களுடன் வாய்மொழி ஆலோசனைகள் இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூன் 3 ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வாய்மொழிக் கருத்துக்களைப் பெறப்படும் என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்தார்.

இருப்பினும் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், முன்மொழியப்பட்ட புதிய மின்சார கட்டணத் திருத்தம் கட்டணத்தை அதிகரிக்கும் என்றாலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறையில் இருந்த மின்சார கட்டணத்தை விட இது குறைவாக இருக்கும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சாரக் கட்டணங்களை திருத்துவது தொடர்பான முன்மொழிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கை மின்சார சபை இதனை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியாளர் தம்மிக விமலரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்மொழியப்பட்ட புதிய திருத்தத்தின்படி புதிய மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் என்றாலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்த மின்சாரக் கட்டணத்தை விட இது குறைவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-2022 காலகட்டத்தில் மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்கான செலவுகள் அதிகரித்த போதிலும், மின்சார கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும், அந்தக் காலகட்டத்தில் எரிபொருள் விலைகள், நிலக்கரி, உதிரி பாகங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளும் தொடர்ந்து அதிகரித்தன என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

குறிப்பிடத்தக்க நிதி இழப்புகளைக் காரணம் காட்டி, 2025 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலத்திற்கு மின்சாரக் கட்டணங்களை 18.3 வீதமாக அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# செயற்கை நுண்ணறிவு சட்டத்துக்கான திட்ட வரைவை இலங்கை வெளியிடும்!

கொழும்பு, மே. 23

செயற்கை நுண்ணறிவு சட்டத்துக்கான திட்ட வரைவை அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இலங்கை உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ளது என செயற்கை நுண்ணறிவு ஆலோசனைக் குழுவின் தலைவர் கலாநிதி ரொமேஷ் ரணவன தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தெளிவான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுவதற்கான முன்னோடி திட்டமாக இந்த நடவடிக்கை உள்ளது.

சில அம்சங்கள் தற்போதுள்ள சட்டங்களால் உள்ளடக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த இடைவெளிகளைக் குறைப்பதே இதன் நோக்கம்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பாக கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும் தொழில்நுட்பத்தின் செயன்திறன் மிக்க வளர்ச்சி மற்றும் பயன்பாட்டை உறுதி செய்தல் தெளிவான வழிகாட்டுதலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டம் இலங்கையின் பரந்த தேசிய செயற்கை நுண்ணறிவு மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். இது தனியார் துறை, அரச மற்றும் உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சர்வதேச அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு கூட்டு முயற்சியாகும்.

கடந்த ஆறு மாதங்களாக உருவாக்கப்பட்ட இந்த உத்தி, ஹான்ஸ் விஜேசூரியாவின் கீழ் புதிய செயற்கை நுண்ணறிவு ஆலோசனைக் குழு ஒன்றால் மேற்பார்வையிடப்பட்டு, சிங்கப்பூர் மற்றும் எஸ்டோனியா போன்ற நாடுகளில் காணப்படும் வெற்றிகரமான சர்வதேச மாதிரிகளை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# நீண்ட தூர சேவை பஸ்களுக்கு பொறியியல் அறிக்கை கட்டாயம்!

கொழும்பு, மே. 23

நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் பஸ்களுக்கு பொறியியல் அறிக்கையைப் பெறுவதை கட்டாயமாக்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

நீண்ட தூர சேவை பஸ்களால் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 100 கிலோ மீற்றருக்கு அதிக தூரம் பயணம் செய்யும் அனைத்து பஸ்களும் இந்த அறிக்கையைப் பெறவேண்டும்.

அதன்படி, ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பொறியியல் அறிக்கையைப் பெறுவது கட்டாயம் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பயணிகள் பஸ்களுக்கு பயணச்சீட்டுகள் வழங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்படும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற் கொள்ளையைத் தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

கொழும்பு, மே 23


**கடற் கொள்ளையைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

அம்பாறை, மட்டக்களப்பு மீனவர்களின் மீன்கள் கடலில் கொள்ளையிடப்படுவது தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையை கையளித்து, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோரைச் சந்தித்து அது தொடர்பில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா நேற்று முன்தினம் புதன்கிழமை கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவும் கலந்து கொண்டார். (எ)

# 22 கஜ முத்துக்களுடன் இருவர் கைதாகினர்!



மட்டக்களப்பு, மே 23

மட்டக்களப்பு - ஏறாவூரில் 22 கஜ முத்துக்களுடன் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கட்டளைக்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ. மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவின ரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

இவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-05)

# மாற்றுத் திறனாளிகளை தொழிலில் உட்புகுத்தல் குறித்து கலந்துரையாடல்



திருகோணமலை, மே 23

சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனிதவலு அபிவிருத்தித் திணைக்களம் இணைந்து ஜெய்க்கா ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் மாற்றுத் திறனாளிகளை தொழிலில் இணைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று திருகோணமலை மாவட்ட செயலக உப மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஹேமந்த குமார தலைமையில் நடை பெற்ற இந்தக் கலந்துரையாடலில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் இரண்டாம் காலாண்டுக்கான எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலக மட்டங்களிலும் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கவுள்ள தொழில் ஆதரவு பிரிவு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் சிஹின திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

மற்றவர்களில் தங்கி வாழ்வதிலிருந்து தாங்களை வலுப்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தத் திட்டம் துணைபுரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் துறை சார் உத்தியோகத்தர்கள், மாவட்ட இணைப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பல்துறைசார் சர்வதேச ஆய்வு மாநாடு



ஒலுவில், மே 23

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட முதுகலைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாட்களைக் கொண்ட சர்வதேச ஆய்வு மாநாடு மே மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்ட நிலையத்தில் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில் மற்றும் முதுகலைப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல் ஆகியோரது இணைத் தலைமைத்துவத்தில் நடைபெற்றது.

இந்தியாவின் சென்னை குரு நானக் கல்லூரியின் சமூகவியல் துறை உதவி பேராசிரியர் கலாநிதி வேணட் ராஜதுரை ஆரம்ப உரையை நிகழ்த்தினார். தொடர்ந்து, மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் நகரில் உள்ள சௌத் பீல்ட் கல்லூரியின் முதல்வர் கலாநிதி அனுராதா ராய் கௌரவ விருந்தினர் உரை நிகழ்த்தினார்.

கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தன்னுடைய உரையில், சமூகத்திலுள்ள டிஜிற்றல் பாகுபாடு, கல்வி மற்றும் தொழில்நுட்பத்துக்கான சம வாய்ப்பின்மை ஆகியவை அடக்குமுறை சமூகத்தை உருவாக்கும் மிகப்பெரிய காரணிகளாக உள்ளன எனக் கூறினார். இத்தகைய சிக்கல்களை அணுகுவதற்காக பல்துறை ஆய்வுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதையடுத்து, நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் யு.எல். அப்துல் மஜீத், சூம் தொழில்நுட்பத்தின் மூலம் இணைந்து கொண்டு உரையாற்றினார். அப்போது, கல்வி மற்றும் ஆராய்ச்சியின் மூலம் சமூக மாற்றத்தை உருவாக்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வு, பல்துறை சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகள், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறனுடன் இணைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அம்சமாக அமைந்தது. இந்த மாநாட்டில் இலங்கையின் பல முக்கியமான பல்கலைக்கழகங்களான கொழும்புப் பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பெரதெனிய பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் பங்கேற்றனர். மேலும், இந்தியா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து பல்வேறு நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சிக் குழுவினர் இணைந்து கொண்டனர்.

ஆய்வரங்கிற்காக 110 இற்கும் மேற்பட்ட சுருக்கக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை சமூக அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம், கல்வி மற்றும் மனிதவள மேம்பாடு போன்ற பல துறைகளை உள்ளடக்கியது குறிப்பிடத்தக்கது. (எ-06)


# கிழக்கு மாகாணத்துக்கு மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, மே 23

கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கு மின்னல் தாக்கம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# மாளிகா வீதியை அலங்கோலம் செய்யும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை





கல்முனை, மே 23

அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு மீன் சந்தைக்கு செல்லும் மாளிகா வீதியின் மாளிகா சந்தி, கல்முனை மாநகரத்தில் அதிக சனத்தொகை நடமாட்டமுள்ள வீதிகளில் ஒன்றான மருத்துவமனை வீதி போன்ற முக்கியமான வீதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை திருத்தப் பணிகளை செய்து முடித்து விட்டு வீதிகளை முறையாக செப்பனிடாமல் சென்றதனால் அப்பிரதேச மக்களும் பாதசாரிகளும் பெரும் அசௌகரியங்களை தினம் தினம் எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதிகளை முறையாக செப்பனிட பொதுமக்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள், ஊழியர்களை கேட்டுக் கொண்ட போதிலும் அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இந்த வீதிகளில் இந்நாள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், அரச உயர் அதிகாரிகளின் வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் என்பனவும் அமைந்துள்ளன.


கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்த வீதிகளை கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் காப்பெற் வீதியாக சீரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்கியிருந்த போதிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இவ்வாறான செயல்களால் மழை காலங்களில் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வடிகான்கள் கூட மண்ணால் நிரப்பப்பட்டு வெள்ளம் வடிந்தோட முடியாத நிலையும் சில இடங்களில் உள்ளதை காணமுடிகிறது

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதிகளை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையின மக்கள் படுகொலை

## தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி வாக்குவாதம்



வாஷிங்டன், மே 23

**வெள்ளையின விவசாயிகள் படுகொலை செய்யப்பட்ட போது தென்னாபிரிக்க அரசு அதனைத் தடுக்கத் தவறிவிட்டது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். டெஸ்லா மற்றும் ஸ்டார்லிங்க் போன்ற எலான் மஸ்க்கின் நிறுவனங்களுடனான வாய்ப்புகள் பற்றி ஆலோசிப்பதற்காக சிரில் ரமபோசா திட்டமிட்டுள்ளார். எனினும், தென்னாபிரிக்காவில் பிறந்து வளர்ந்தவரான எலான் மஸ்க், வெள்ளையின மக்களுக்கு எதிரான கொள்கைகளை ரமபோசா தொடர்கிறார் என்று குற்றச்சாட்டாக கூறி வருகிறார்.

ஆனால், இதனை ரமபோசா மறுத்து வருகிறார். இந்த நிலையில் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி டொனால்ம் ட்ரம்பை நேரில் சந்தித்து பேசினார். உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளிலிருந்து, அகதிகளாக அமெரிக்காவுக்கு வருகை தருவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் தடை விதித்த சூழலில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றது.

ரமபோசா உடனான சந்திப்பின்போது, ஜனாதிபதி ட்ரம்ப் செய்தியாளர்கள் சந்திப்பையும் ஒன்றாக நடத்தினார். அப்போது, ஆபிரிக்காவில் வெள்ளையின மக்கள் படுகொலை செய்யப்படுவது பற்றி ரமபோசாவிடம் ட்ரம்ப் காரசார விவாதத்தில் ஈடுபட்டார். சமீபத்தில் வெளிவந்த செய்திகள் மற்றும் வீடியோக்கள் ஆகியவற்றை சான்றாக கையில் வைத்திருந்த ட்ரம்ப் அவற்றை செய்தியாளர்களிடம் குறிப்பிட்டு பேசினார்.

தொடர்ந்து ட்ரம்ப், வெள்ளையின விவசாயிகள் படுகொலையை ஆபிரிக்க அரசு தடுக்கத் தவறி விட்டது என குற்றச்சாட்டாக கூறினார். அவர்களுக்கு எதிரான நில அபகரிப்புகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன என ட்ரம்ப் கூறினார். அப்போது ரமபோசா மற்றும் அவருடைய அரசுக்கு எதிராக ட்ரம்ப் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தக் கூட்டத்தில் சில வீடியோக்கள் மற்றும் செய்திகளையும் வெளியிட்டார். வெள்ளையின விவசாயிகள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்படுவதும் மற்றும் படுகொலை செய்யப்படுவதும் நடக்கிறது என ஆவணங்களை கொண்டு அவர் வெளிப்படுத்தினார். இது போன்ற வன்முறை மற்றும் இன வெறி சட்டங்களால் வெள்ளையின தென்னாபிரிக்கர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர் என்றும் அவர் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

எனினும் ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டுக்களை ரமபோசா மறுத்துள்ளார். தென்னாபிரிக்காவில் அனைத்து இன மக்களும் குற்றச் செயல்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என பதிலாக தெரிவித்துள்ளார். ரமபோசா அரசு இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து மறுத்து வரும் சூழலில் மீண்டும் இதனை கூறினால், ட்ரம்ப் அவர் கூறியதற்கான சான்றுகளை நிரூபிக்க வேண்டும் என்று ரமபோசா அலுவலகம் தெரிவித்துள்ளது.

(எ)

# பாகிஸ்தான் வான் எல்லையில் இந்திய விமானங்களுக்கு தடை

இஸ்லாமாபாத், மே 23

பாகிஸ்தான் வான் எல்லையில் இந்திய விமானங்கள் பறக்க மேலும் ஒரு மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த மாதம் 22ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து பாகிஸ்தானுக்கு எதிராக சிந்து நதி நீர் ஒப்பந்தம் இரத்து உள்ளிட்ட நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் அறிவித்தது. இதற்கு போட்டியாக, தனது வான் எல்லையில் இந்திய விமானங்கள் பறக்கத் தடை விதித்து பாகிஸ்தான் அறிவித்தது.

இதையடுத்து பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஒப்ரேஷன் சிந்தூர் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் இரு தரப்புக்கும் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் வான் எல்லையில் இந்திய விமானங்கள் பறக்க விதிக்கப்பட்ட தடை மேலும் ஒரு மாதம் நீடிக்கப்படுவதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் விதிகளின் படி, ஒரே நேரத்தில் ஒரு மாதத்துக்கு மேல் வான்வெளி கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது என்பதால் கடந்த மாதம் பாகிஸ்தான் விதித்த தடை இன்று 23ஆம் திகதி வரை அமுலில் உள்ளது. இந்த நிலையில், அந்தத் தடையை நீடித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

(எ)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு சுகாதார அமைப்பு பாராட்டு

ஜெனிவா, மே 23

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் 78ஆவது கூட்டம் ஜெனிவாவில் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி காணொலி மூலம் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் உலகின் முதல் தொற்று நோய் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொற்று நோய்க்கு எதிராக உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் எதிர்கால தொற்று நோய்களுக்கு வலுவான மற்றும் சமமான எதிர்வினையை உறுதி செய்யவும் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற பிரதமர் மோடிக்கு உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் உலக சுகாதார அமைப்பின் தொற்று நோய் ஒப்பந்தம் ஏற்கப்பட்ட நிகழ்வில் காணொலி மூலம் பங்கேற்ற பிரதமர் மோடிக்கு பாராட்டுகள். உலக சுகாதார அமைப்புக்கு இந்தியாவின் ஆதரவும் உறுதிப்பாட்டுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்- என குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# நிதி வழங்குவதை குறைப்பேன் திடீரென மனம் மாறிய மஸ்க்

டோஹா, மே 23

தேர்தல் நிதி வழங்குவதை எதிர்வரும் காலங்களில் பெருமளவில் குறைப்பேன் என்று டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

கட்டாரில் உலக பொருளாதார மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் உலகத் தலைவர்கள், பெரும் தொழில் அதிபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த மாநாட்டில் உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா, எக்ஸ் வலைத்தளம் (டுவிட்டர்), ஸ்டார்லிங்க் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் காணொலி வாயிலாக கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த உரையாடலில் எலான் மஸ்க் பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

“அடுத்த 5 ஆண்டுகளுக்கு டெஸ்லா நிறுவனத்தின் தலைவராக நீடிப்பேன். அதன்பிறகும் நான்தான் - அந்த இடத்தை யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன். டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக தொடர்ந்து செயலாற்றுவேன்”-என்றார்.

இதனைத் தொடர்ந்து, “தேர்தல் நிதி வழங்குவதை வரும் காலங்களில் பெருமளவில் குறைப்பேன்”-என எக்ஸ் தளத்தில் பதிவிட்டார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்காக எலான் மஸ்க் இலங்கை மதிப்பில் சுமார் 8,750 கோடி ரூபாய்க்கும் மேல் செலவு செய்தார். இதனால் டெஸ்லா நிறுவன கார் விற்பனை சரிந்து இலாபம் குறைந்தது.

(எ)

# மழை மற்றும் புழுதி புயலால் மின் இணைப்பு துண்டிப்பு!

புதுடில்லி, மே 23

மழை மற்றும் புழுதி புயலால் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியின் பல்வேறு பகுதிகளிலும் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது.

புதுடில்லியின் பல பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்துள்ளது. இதே வேளை புழுதி புயலும் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பொது மக்களின் பாதுகாப்பு கருதி பல்வேறு இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதன்படி பவானா, நரேலா, ஜகாங்கீர்புரி, சிவில் லைன்ஸ், சக்தி நகர், வசீராபாத், திர்பூர் மற்றும் புராரி ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் இன்றி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(எ)

### பாலியல் வழக்கு விசாரணையின்போது

# நிர்வாண படத்தை ஆதாரமாக காட்டினார் அமெ.பெண் எம்.பி.

வாஷிங்டன், மே 23

பாலியல் வழக்கு விசாரணையின்போது தனது நிர்வாண படத்தை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் நான்சி மேஸ் காட்டியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள தெற்கு கரோலினா மாகாணத்தின் குடியரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நான்சி மேஸ், தனது முன்னாள் காதலர் பேட்ரிக் பிரையண்ட் மீது பாலியல் புகார் அளித்திருந்தார். அவர் தனது அனுமதியின்றி தன்னை ஆபாசமாக படம் எடுத்ததாகவும் பாலியல் ரீதியாக தன்னை துன்புறுத்தியதாகவும் நான்சி மேஸ் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அமெரிக்க பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் விசாரணை நடைபெற்றது. அப்போது நான்சி மேஸ் தனது நிர்வாண படத்தை ஆதாரமாக காட்டினார். அந்த படம் சி.சி.ரிவி. கமராவில் பதிவான காட்சியிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. தனது முன்னாள் காதலர் வீட்டில் இரகசியமாக சி.சி.ரிவி. கமராவை வைத்து தன்னை நிர்வாணமாக படமெடுத்துள்ளார்




என்று நான்சி மேஸ் தெரிவித்தார்.

மேலும், “சுதந்திரம் என்பது வெறும் கோட்பாடு அல்ல. நீங்கள் தூங்கும்போது உங்கள் நிர்வாண உடலை யாரோ ஒருவரின் கமரா படம்பிடிக்காமல் இருக்க வேண்டும். அது உங்கள் உரிமை. நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமின்றி, பாதிக்கப்பட்ட நபராக பேசுகிறேன்”என்று அவர் குறிப்பிட்டார்.


ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் நான்சி மேஸ் தனது முன்னாள் காதலர் பேட்ரிக் பிரையண்ட் மற்றும் அவரது 3 நண்பர்கள் மீது பாலியல் புகார் அளித்திருந்தார். அவர்கள் தன்னை மட்டுமின்றி, சிறுமிகள் உட்பட பல பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக பரபரப்பு குற்றச்சாட்டுக்களை நான்சி மேஸ் முன்வைத்தார்.

அதே சமயம், நான்சி மேஸ் தன் மீது போலியான குற்றச்சாட்டுக்களை கூறி வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி சட்ட ரீதியான நடவடிக்கைகளிலிருந்து தப்பி வருகிறார் என்றும் பேட்ரிக் பிரையண்ட் கூறியுள்ளார். மேலும், நான்சி மேஸ் கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தால் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவுக்கு வெளியே, சட்டப்படி தன் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம் என்றும் பேட்ரிக் தெரிவித்துள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59 ஓட்டம் வித்தியாசத்தில் மும்பை அசத்தல் வெற்றி




மும்பை, மே 23

டில்லி அணிக்கு எதிரான போட்டியில் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்மை அணி வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது. இதுவரை குஜராத் டைட்டன்ஸ், பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய 3 அணிகள் அடுத்த சுற்றுக்கு (பிளேஓவ்) தகுதி பெற்றுள்ளன. சென்னை, ராஜஸ்தான், ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ அணிகள் ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து விட்டன. எஞ்சிய ஒரு பிளேஓவ் இடத்துக்கு டில்லி, மும்பை அணிகள் இடையே நேரடி போட்டி நிலவியது. இரு அணிகளுக்கும் இரு ஆட்டங்கள் எஞ்சி இருந்தன. இத்தகைய பரபரப்பான சூழலில் நேற்று முன்தினம் இரவு மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி, டில்லி கப்பிட்டல்ஸை எதிர்கொண்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து, 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி கப்பிட்டல்ஸ் அணி துடுப்பெடுத்தாடியது. டில்லி அணியின் நட்சத்திர வீரர் கே. எல். ராகுல் 11 ஓட்டங்களில் வெளியேறி அதிர்ச்சி கொடுத்தார். அணித் தலைவர் டூ பிளசிஸ் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

65 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்களை இழந்து தடுமாறிய டில்லி அணிக்கு சமீர் ரிஸ்வி ஓரளவு நம்பிக்கை கொடுத்தார். எனினும், அவர் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. சாண்ட்னர் பந்தில் 39 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். இதன் பிறகு டில்லி அணியின் நம்பிக்கை முற்றிலும் தகர்ந்து போனது. பின்வரிசை வீரர்கள் சொல்லி வைத்தாற்போல் வரிசையாக நடையை கட்டினர். 18. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த டில்லி அணி 121 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் மும்பை அணி 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி பிளேஓவ் சுற்றுக்கு முன்னேறியது. (எ)




## மலேசியா பட்மின்ரன் பிரனாய் அபார வெற்றி

கோலாலம்பூர், மே 23

மலேசியா மாஸ்டர்ஸ் பட்மின்ரன் தொடரில் இந்திய வீரர் பிரனாய் அபார வெற்றி பெற்றுள்ளார்.

மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மின்ரன் போட்டி கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் 35ஆவது இடத்தில் இருக்கும் இந்திய வீரர் எச். எஸ்.பிரனாய், ஜப்பானின் கென்டா நிஷிமோட்டோவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் பிரனாய் 19-21, 21-17, 21-16 என்ற செற் கணக்கில் நிஷிமோட்டோவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## சூர்யகுமார் புதிய சாதனை

மும்பை, மே 23

ரி - 20 கிரிக்கெட் போட்டியில் சூர்யகுமார் யாதவ் புதிய சாதனை படைத்துள்ளார்.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது. மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி, டில்லி கப்பிட்டல்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 73 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் தென்னாபிரிக்க வீரர் பௌமாவின் சாதனையை சமன் செய்துள்ளார்.

சூர்யகுமார் யாதவ், இந்த சீசனில் களமிறங்கிய 13 ஆட்டங்களிலும் குறைந்தது 25 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் மூலம் ரி -20 கிரிக்கெட் போட்டியில் தொடர்ச்சியாக அதிக முறை 25 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த தென்னாபிரிக்க வீரர் பௌமாவின் சாதனையை (13 முறை) சமன் செய்தார். நடப்பு தொடரில் இதுவரை 13 ஆட்டங்களில் விளையாடியுள்ள சூர்யகுமார் யாதவ் 4 அரைச்சதங்கள் உட்பட 583 ஓட்டங்கள் குவித்துள்ளார். (எ)

## மலேசியா மாஸ்டர்ஸ் பி. வி. சிந்து தோல்வி

கோலாலம்பூர், மே 23

மலேசியா மாஸ்டர்ஸ் பட்மிண்டன் தொடரின் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட இந்திய வீராங்கனை பி. வி. சிந்து, தொடரிலிருந்து வெளியேறினார்.

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மிண்டன் போட்டி கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் பி. வி. சிந்து, வியட்நாமின் ங்குயென் துய் லின்க் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 21-11 என்ற புள்ளிக்கணக்கில் ங்குயென் துய் லின்க்கும் 2ஆவது செற்றை 21-14 என்ற புள்ளிக்கணக்கில் பி.வி. சிந்துவும் கைப்பற்றினர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் அனல் பறந்தது.

இதில் அபாரமாக செயல்பட்ட ங்குயென் துய் லின்க் 21-15 என்ற புள்ளிக்கணக்கில் பி.வி.சிந்துவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட சிந்து தொடரிலிருந்து வெளியேறினார்.



## பாகிஸ்தான் அணி அறிவிப்பு

கராச்சி, மே 23

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்தத் தொடர் நிறைவடைந்ததும் பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு சல்மான் அலி ஆஹா தலைவராகவும் ஷதாப் கான் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்த அணியில் முன்னணி வீரர்களான பாபர் அஸாம், முகமது ரிஸ்வான், ஷாகின் ஷா அப்ரிடிக்கு இடம் அளிக்கப்படவில்லை.

பாகிஸ்தான் அணி விவரம் வருமாறு, சல்மான் அலி ஆஹா, ஷதாப் கான், அப்ரார் அகமது, பஹீம் அஷ்ரப், பக்கார் ஜமான், ஹாரிஸ் ரவூப், ஹசன் அலி, ஹசன் நவாஸ், ஹூசைன் டலட், குஷ்தில் ஷா, முகமது ஹாரிஸ், முகமது வாசிம் ஜூனியர், முகமது இர்பான் கான், நசீம் ஷா, சைம் அயூப், ஷபீப்சடா பர்ஹான் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

## ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை மோசமான சாதனை

புதுடில்லி, மே 23

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் சென்னை அணி மோசமான சாதனை படைத்துள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் டில்லியில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இந்தத் தோல்வியால் சென்னை அணி மோசமான சாதனை படைத்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்குப் பிறகு நடப்பு சீசனிலும் அதிகபட்சமாக 10 போட்டிகளில் சென்னை அணி தோல்வியைச் சந்தித்துள்ளது. சி.எஸ். கே. அணி தனது கடைசி போட்டியில் குஜராத்தை எதிர்கொள்கிறது. (எ)

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்: இந்திய அணி நாளை அறிவிப்பு

மும்பை, மே 23

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்கேற்றும் இந்திய அணி நாளை 24ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இந்தியா- இங்கிலாந்து இடையிலான [illegible] டெஸ்ட் போட்டி ஜூன் 20ஆம் திகதி லீட்சில் தொடங் குகிறது.

ரோஹித் சர்மா, விராட் கோலி ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்று விட்ட [illegible] அவர்களுக்குப் பதிலாக யார் இறங்குவார்கள் என்ற எதிர் பார்ப்பு எழுந்துள்ளது. அத்துடன் புதிய டெஸ்ட் அணித் தலைவரை நியமிக்க வேண்டி யுள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இந்திய அணியினர் மற்றும் புதிய தலைவர் நாளை தெரிவு செய்யப்படலாம் என தெரிவுக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை என முறைப்பாடு!



யாழ்ப்பாணம், மே 22

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பெண் ஒருவரை காணவில்லை என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மெக்கியதாஸ் மரியகிளாறா சாளினி (வதனி) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்டவரான இவர், முல்லைத்தீவிலிருந்து நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தை வந்தடைந்த நிலையில் காணாமல் போயிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட் டது.

இதேவேளை, இவர் பற்றி அறிந்தால் 077 886 8274 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அவரின் சகோதரரான அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (இராசசிங்கம்) கேட்டுள்ளார்.

## 161 உள்ளூராட்சி...

உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்கு மாறும் தொடர்புடைய கட்சிகள் மற் றும் சுயேச்சை குழுக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என் றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## புதிய...

நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் கோவிட் - 19இற்கான மருத்துவ மாதிரிகளை சோதிக்கும் ஒருங்கிணைந்த சுவாச கண்காணிப்பு தொடர்ந்து நடை பெற்று வருகிறது. தற்போதைய அவதானிப்பின்படி, கோவிட் - 19 பாதிப்புகளில் அதிகரிப்பு இல்லை. நாட்டில் தொற்றுநோய் ஏற்படக்கூடிய சூழ்நிலை களை முன் கூட்டியே அடையாளம் காண தேவையான ஆய்வக கண்காணிப்பு அமைப்பும் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

மற்ற சுவாச நோய்களைப் போலவே அவ்வப்போது கோவிட் - 19 அதிகரிக்கக்கூடும். பொதுமக்களுக்கு தற்போது ஆபத்து குறைவாக இருக்கிறது. இருப்பினும், வயதானவர்கள், பலவீனமான நோயெதிர்ப்பு உள்ளவர்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளமையால் சிறப்பு கவனம் செலுத்துவது முக்கியம்.

## வடக்கு...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 159 பாராளுமன்ற பெரும்பான்மை கொண்டுள்ள அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தற் போது சகல தரப்பினருடன் பேச்சில் ஈடு படுகிறது.

அரசியல் கலாசாரம் மாற்றமடையும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கங்களைப் போன்றே செயல்படுகிறது. மக்களாணையை முறையற்ற வகையில் செயல்படுத்துகிறது. சந்தர்ப்பவாத அரசியலில் இனியும் ஈடுபடாதீர்கள். மக்களுக்கு உண்மையை குறிப்பிடுங்கள். உண்மையாக செயல்படுங்கள். - என்றார். (ஐ)

## மயங்கி...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு யுவதி உணவருந்திவிட்டு ஓய்வாக அமர்ந் துள்ளார். அப்போது அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு, மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவர் அம்புலன்ஸ் மூலம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், இடை வழியிலேயே உயிரிழந்தார்.

அவரின் இதயம் செயலிழந்ததால் மரணம் நிகழ்ந்ததாக உடற்கூற்றாய்வு பரிசோதனையில் தெரியவந்தது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபால சிங்கம் மேற்கொண்டார்.

இளம் வயதினர் இதய நோயால் உயிரிழந்த சம்பவம் இந்த வாரத்தில் மட்டும் இது இரண்டாவதாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரபாகரனின்...

பாராளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனாவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போதே, அவர் மேற் கண்டவாறு கூறினார்.

சபையில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, "அர்ச்சுனா, நீங்கள் ஆனையிறவுக்கு சென்று வடக்கின் உப்பை தெற்குக்கு அனுப்பக்கூடாது என்று அங்குள்ள ஊழியர்களை கொண்டு போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளீர்கள். வடக்கு உப்பு, தெற்கு உப்பு என்று இல்லை. நாட்டின் உப்புதான் காணப்படுகிறது. வடக்கு உப்பு, தெற்கு உப்பு என இருந்தால் அதனை அந்தக் காலத்தில் வைத்திருங்கள். நீங்கள் அந்தக் காலத்தில் பிரபாகரனின் உப்பு என உருவாக்கினீர்கள். நாங்கள் முழு நாட்டையும் ஒன்றிணைத்துள்ளோம். அது இப்போது கிடையாது." - என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த அர்ச்சுனா எம். பி., "வடக்கு உப்பு, தெற்கு உப்பு என்று கிடையாது. அது பற்றி நான் பேசவே யில்லை. அங்குள்ள ஊழியர்களை வெளியேற்றியதால் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு உப்பு, புலிகளின் உப்பு, தெற்கு உப்பு என்று நான் கூறவில்லை. வடக்கின் உப்பை தெற்குக்கு கொண்டு வாருங்கள். குறைந்த விலையில் விற்பனை செய்யுங்கள். அதற்கு நாம் உதவி செய்கிறோம் என்று கூறியுள்ளேன்.", என்றார்.

இதற்கு பின்னர் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி கூறுகையில், "நீங்கள் வடக்கு உப்பை தெற்குக்கு அனுப்ப வேண்டாம் எனக் கூறியுள்ளீர்கள். அது மிக மோசமான கூற்றாகும். அதைவிட உப்பு தொழிற்சாலையின் முகாமையாளரை மாற்றுமாறு கூறியிருக்கிறீர்கள். அதாவது, அவர் கிளிநொச்சியை சேர்ந்தவராம். யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் அல்லவாம். அவ்வாறு செய்ய முடியுமா? முகாமையாளர்மீது தவறு இருந்தால் இடமாற்றம் செய்வது வேறு கதை. இவர்கள் சொல்வதுபோல ஆனையிறவில் யாழ்ப்பாணத்தவர்கள் மாத்திரம் தான் இருக்க வேண்டுமா? கிளிநொச்சியை சேர்ந்தவருக்கு யாழ்ப்பாணத்தில் இருக்க முடியாது என்று சட்டம் எதுவும் கிடையாது. கிளிநொச்சியை சேர்ந்தவருக்கு யாழ்ப்பாணத்தில் தொழில் செய்ய முடியாதா? அர்ச்சுனா நீங்கள் கூறுங்கள் - என்று கேட்டார்.

இதற்கு அர்ச்சுனா எம். பி., "நான் அவ்வாறானதொரு கோரிக்கையை முன் வைக்கவில்லை. ஆனையிறவில் இருந்த முகாமையாளரை மன்னாருக்கு இடமாற்றம் செய்திருக்கிறார்கள். மன் னாரில் உள்ள இவர்களின் தொழிற்சங்க பிரதிநிதியை ஆனையிறவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மக்கள் அங்கு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதுதான் அதில் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் மிகப்பெரிய பொய்யைக் கூறுகிறார்கள். எனது மனைவி ஒரு சிங்களவர். நான் எப் படி இவ்வாறான பிரச்னையை எழுப்ப முடியும்? நான் எவ்வாறு பிரதேசவாதம் கதைப்பது? பொய் சொல்லாதீர்கள். பாராளுமன்றத்தில் பொய் பேசாதீர்கள்.", என்று பதிலளித்தார். (ஐ)

## ஐ.நா...

யோசனையும் முன்வைக்கப்பட்டது. அவை அமுலுக்கு வரவில்லை.

அரசியல் ரீதியில் தற்போது வங்குரோத்தடைந்துள்ள தரப்பினரே தமக்கு புத்துயிர் அளிப்பதற்கு போரை பயன்படுத்த முற்படுகின்றனர். தற்போது சமாதானமே முக்கியம். அதனை செய்வதற்கு நாம் முன்வரவேண்டும். அந்த இலக்கை நோக்கியே நாம் பயணிக் கிறோம்.

தேசிய பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் உறுதியளித்துள்ளோம். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. எனவே, இனவாதம் பேசினால் அது நல்லிணக்க முயற்சிக்கு தடையாக அமையும்.

மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். இங்கு அவர், பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களை கண்காணிப்பார். அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்படும். அந்த சவாலுக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தலையிட்டாலும் - தலையிடா விட்டாலும்கூட தேசிய நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது."- என்றார். (அ-ஐ)

## எதிர்க்கட்சி...

கூறினார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற சுயேச்சை குழுக்களை அழைத்து அவருக்கு சிறப்புரிமைகளை வழங்குவதாகக்கூறி, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆதரவைக் கோரியிருக்கிறார். இதற்கு முன்னர் எந்தவொரு ஜனாதிபதியும் செய்யாத வெட்கப்படக்கூடிய செயலையே தற்போதைய ஜனாதிபதி செய்திருக்கிறார். முறையற்ற விதத்திலாவது உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதே அரசாங்கத்தின் தேவையாகவுள்ளது. தேசிய மக்கள் சக்தியிலும், ஜே.வி.பி.யிலும் காணப்பட்ட நேர்மை தற்போது முற்றாக காணாமல் போயுள்ளது.

நாம் ஆளும் தரப்பின் குறைகளை சுட்டிக்காட்டும் போது பாராளுமன்றத்துக்கு வெளியில் எமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவுக்கு கடிதம் மூலம் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஏதேனுமோர் எதிர்க்கட்சி எம். பி. கொல்லப்பட்டால் அந்த பழியை நேரடியாக பாதாள உலகக் கும்பல்மீது சுமத்த முடியும். எதிர்க் கட்சிகளுக்கும் பாதாள உலகக் கும் பல்களுக்கும் தொடர்பிருப்பதாகக்கூறி, இரு தரப்புக்கும் இடையிலான மோதலே மரணத்துக்குக் காரணம் என்று அரசாங்கம் தெரிவிக்கக்கூடும். பாதாள உலகக் கும்பலால் எதிர்க்கட்சி எம். பி.க்களில் யாராவது கொல்லப் பட்டால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். - என்றார். (ஐ)

## எங்களை...

கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 7 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதற்கு அரசாங்கம் இதுவரையில் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது? உப்பு பிரச்னைக்கு தீர்வு காணாதவர்கள் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியதே.

நாட்டு மக்கள் மரமுந்திரிகை சாப்பிடுவதை போன்று உப்பு சாப்பிடுவதில்லை என்று அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கிறது. உணவின் அடிப்படை பொருளாகவே உப்பு காணப்படுகிறது. ஆகவே, உப்பு உற்பத்தியில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு உடன் தீர்வு காணுங்கள்.

## விபத்தில்...

சரசாலை தெற்கு, சாவகச்சேரியை சேர்ந்த வைத்திலிங்கம் சிவராஜன் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த முதியவர், கடந்த 16ஆம் திகதி வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். கொடிகாமம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சிமெந்தால் அமைக்கப்பட்ட உண்டியலுடன் மோதுண்டு மயக்கமடைந்தார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை அவர் உயிரிழந் தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## பிள்ளையானின்...

17ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரன் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியு டன் 90 நாட்களுக்கு அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தாம் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமை கள் மீறப்பட்டுள்ளன என்று தெரி வித்து அவர் உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதியரசர்களான மகிந்த சமயவர்தன, மேனகா விஜய சுந்தர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு முன்பாக நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே, குறித்த மனு எதிர்வரும் ஜூன் 17ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று நீதியரசர்கள் அறிவித்தனர். (ஐ)

## நாட்டில்...

ஆனால், மருந்து பற்றாக்குறை தொடர்பிலோ அல்லது சுகாதாரத் துறை குறித்தோ எழுப்பப்பட்ட கேள்விகளுக்கோ எந்தப் பதிலும் இல்லை. நாட்டு மக்களின் வாழும் உரிமையை பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு எந்த ஆர்வமும் இல்லை. இலவச சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாக இல்லை.

எல். பி. 8.1 எனப்படும் கோவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற் போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹொங்கொங்கில் பரவி வருகின்றன. இந்த துணை வகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்தவித பரிசோதனைகளும் நடைபெறுவதாக காண முடியவில்லை.

இந்த கோவிட் துணை மாறுபாடு திரிபுகள் தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். மருத்துவமனைகளில் இந்த அறிகுறிகளைக் காண்பிப்பவர்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சின்னம்மை பரவுவதாலும் கடுமையான பிரச்னைகள் எழுந்துள்ளன. இதற்கு குறைந்தபட்சம் 6 வாரங்கள் தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டும். இந்த நோய் பரவுவதற்கான சாத்தியம் அதிகரித்து காணப்படுகிறது. எனவே, இதற்கும் தெளிவான திட்டமொன்று முன்னெடுக்க வேண்டியது அவசியம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தமானியை வாபஸ் பெற பிரதமரிடம் வலியுறுத்துவேன்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு, மே. 23

**பிரதமருக்கும், வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொண்டு, வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுமாறு உறுதியாக வலியுறுத்த விருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

அரசாங்கத்தினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அதனையடுத்து அரசாங்கம் அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.


இவ்வாறானதொரு பின்னணியில் இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 11.00 - பி.ப 1.00 மணி வரை பாராளுமன்றத்தில் தனது தலைமையில் நடைபெறவிருக்கும் சந்திப்பில் பங்கேற்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய வடக்கு, கிழக்கு மாகா ணங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

அதன்படி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இச்சந்திப்பில் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசாங்கம் எத்தகைய காரணங்களை முன்வைத்தாலும், இவ்வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்தோடு அரசாங்கத்துக்கு உண்மையிலேயே வடக்கு, கிழக்கிலுள்ள காணிகளை அபகரிக்கும் நோக்கம் இல்லை எனில், அவர்கள் மக்கள் முகங் கொடுத்துவரும் காணிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கே விரும்புகிறார்கள் எனின், அதற்கென விசேட ஆணைக் குழுவொன்றை அமைத்து உரிய நடவடிக்கைகளை முன் னெடுக்கமுடியும் என இச்சந்திப்பின்போது தான் சுட்டிக்காட்டவுள்ளதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# நல்லூர் முன்றலில் அசைவ உணவகம் பெயர்ப்பலகை அதிரடியாக அகற்றல்!



யாழ்ப்பாணம், மே. 23

நல்லூர் ஆலய முன்றலில் மாநகர சபையின் அனுமதியின்றி திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தின் பெயர்ப் பலகை மாநகர சபையினரால் அகற்றப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய முன்றலில் மாநகர சபையிடம் அனுமதி பெறாது அசைவ உணவகம் திறக்கப்பட்டுள்ள நிலையில் அனுமதிகளை பெறுமாறு மாநகர சபை உணவகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் , அனுமதி இன்றி உணவகத்துக்கு முன்பாக வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் பெயர்ப் பலகை மாநகர சபையினரால் நேற்று வியாழக் கிழமை அகற்றப்பட்டுள்ளது.

அதேவேளை , குறித்த உணவகத்தில் சில சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகரினால் யாழ். நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையை பேணும் வகையில் குறித்த உணவகத்தை அகற்றக் கோரி கடந்த செவ்வாய்க்கிழமை கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் , நேற்று முன்தினம் புதன்கிழமை மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (அ)

# 3,147 தாதியர்களுக்கு நாளை நியமனம்!

கொழும்பு, மே 23

தாதியர் சேவையில் சேர்க்கப்பட்ட 3 ஆயிரத்து 147 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அலரி மாளிகையின் கூட்ட மண்டபத்தில் பிரதமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாட்டின் தாதியர் சேவை வரலாற்றில் ஒரே நேரத்தில் இந்தளவு எண்ணிக்கையினருக்கு நியமனக் கடிதங்கள் வழங்குவது இதுவே முதல்முறை. இதன் போது, தாதியர் சேவையில் 79 விசேட தர அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளன.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பங்கேற்கும் நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு கலந்து கொள்ளவுள்ளது. (ஐ)

# மோசமான வானிலையால் உப்பு இறக்குமதி தாமதம்!

கொழும்பு, மே 23

நிலவும் மோசமான வானிலையால் கொள்வனவு செய்யப்பட்ட உப்பை நாட்டுக்குக் கொண்டுவருவதில் மேலும் சில நாட்கள் தாமதம் ஏற்படலாம் என்று தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உப்பு பற்றாக்குறைக்கு தீர்வாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கப்பல் நேற்று முன்தினம் வருவதாக இருந்தது. தனியார் துறையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 250 மெற்றிக் தொன் உப்பு மற்றும் தேசிய உப்பு நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் உப்பு என மொத்தம் 3 ஆயிரத்து 50 மெற்றிக் தொன் உப்பு நாட்டுக்கு கொண்டுவரப்படவிருந்தது.

இருப்பினும், பாதகமான வானிலை காரணமாக உப்பு இருப்பு சில நாட்களுக்கு தாமதமாகலாம் என்று தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மகாவலி அதிகார சபையின் பிரிவு முகாமையாளர் கைது!



கொழும்பு, மே. 23

20,000 ரூபாவை இலஞ்சமாக பெற்ற மகாவலி அதிகார சபையின் முகாமையாளர் ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். வெலிகந்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்று ள்ளது.

ரணவிரு அறக்கட்டளையின் கீழ் வீடு கட்டுவதற்காக முறைப்பாட்டாளருக்கு மகாவலி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்ட எத்துகல பகுதியில் உள்ள 20 பேர்ச் காணியின் ஒரு பகுதி சதுப்பு நிலமாக காணப்பட்டுள்ளது.

அதற்கமைய மகாவலி அதிகார சபையின் கீழ் வேறு ஒரு இடத்தை பெற்றுக்கொடுத்து அனுமதிப்பத்திரம் வழங்கி உதவுவதற்காக சந்தேக நபர் இவ்வாறு 20,000 ரூபா இலஞ்சம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, மகாவலி அதிகார சபையின் சேனபுர வலய முகாமைத்துவ காரியாலயத்துடன் இணைக்கப்பட்ட சந்துன்பிட்டிய பிரிவின் முகாமையாளராக கடமையாற்றி வரும் குறித்த நபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். (அ)

# ஐ.நா. நிரந்தர வதிவிட பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த!



கொழும்பு, மே. 23

அமெரிக்காவின், நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜயந்த ஜயசூரியவுக்கு வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்,

நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவுக்கு எனது வாழ்த்துக்கள்.

நீதித்துறையில் உங்களின் பரந்த அனுபவமும், அரசியலமைப்பு விடயங்களில் உங்கள் ஆழமான ஈடுபாடும், இந்த முக்கியமான உலகளாவிய பங்கில் இலங்கைக்கு சிறப்பாகச் சேவை செய்யும் என்பதில் சந்தேகமில்லை. சர்வதேச அரங்கில் நமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்கள் வெற்றிக்கு வாழ்த்துக்கள். - எனக் கூறியுள்ளார். (அ)

# தமிழக சட்டமன்ற உறுப்பினரை சந்தித்த வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தினர்

யாழ்ப்பாணம், மே. 23

யாழ்ப்பாணத்துக்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் ஷா.நவாஸை வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

தெல்லிப்பளையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று வியாழக்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

அதன்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த கோரியும், அத்துமீறல்களால் வடமாகாண மீனவர்கள் எதிரநோக்கும் பிரச்னைகள், நட்டங்கள் தொடர்பிலும் சட்ட மன்ற உறுப்பினரிடம் வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தினர் எடுத்துக் கூறினர். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org